## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 38/2020 | Date : 09.03.2023 | DW2 |
|---|---|---|
| Name: அரசியம்மாள் | W/o. **மாதன்** | |
| Evidence Recorded Time: 12.46 P.M. to 01.00 P.M | | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் குடியிருப்பது வீரக்கல் காலனியில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் ஈசா பள்ளி, நங்கவள்ளி காட்டுவளவில் குடியிருப்பதாக கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. நான் மேற்படி ஈசா பள்ளி, நங்கவள்ளி காட்டுவளவில் நான் குடியிருப்பதற்காக ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை, குடும்ப அட்டை ஆகிய அனைத்து ஆவணங்களும் வீரக்கல் காலனியில் உள்ளது என்றால் சரிதான். தேசிய ஊரக வேலை திட்டத்தில் வேலைக்கு சென்று வருகிறேன் என்றால் சரிதான். யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் என்றால் சந்திரன் என்பவர் இந்திரஜித் என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்திரஜித்தின் தாயாருக்கு ஒரு ஏக்கர் 79 செண்ட் நிலம் நங்கவள்ளி கிராமத்தில் பாத்தியப்பட்டதாக கூறியுள்ளேன், அதற்கான சர்வே எண்ணோ, சரியான அளவோ எனக்கு தெரியுமா என்றால் சர்வே எண் தெரியாது, ஒரு ஏக்கர் 79 செண்ட் நிலத்தை ஓட்டிக்கொண்டுள்ளோம். இந்திரஜித்துக்கு பாகம் ஒதுக்கப்பட்டது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு நீதிமன்ற ஆணையர் வந்து பார்த்தாரா என்றால் இருமுறை பார்வையிட்டார், ஒரு முறை அளந்தார். எந்த சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சந்திரன் என்பவர் பெரிய கேட் வழியாக எரு, காடு ஓட்டுவதற்கு டிராக்டர் போன்றவற்றைகளை செய்துவந்தார். வழக்கு தாக்கல் செய்து இரண்டு வருடங்கள் ஆகிறது. சின்ன கேட் வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் போடப்பட்டது என்றால் சரியல்ல இரண்டு கேட்டுகளும் ஒரே நாளில்தான் போடப்பட்டது. சந்திரனை கேட் வழியாக உள்ளே போகக்கூடாது என்று இரண்டு வருடங்களாக தடுத்து வருகிறார்கள் என்றால் சின்னகேட் வழியாக சென்று வருகிறார். ஆனால் சின்ன கேட் வழியாக வாகனங்களை கொண்டு செல்லமுடியாது என்றால் சரிதான். சமாதி யாருடைய

சமாதி என்று தெரியாது, ஆனால் ஒரு சமாதி உள்ளது. இந்த சொத்து யாரிடம், எவ்வளவு ரூபாய்கு வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. இன்று வரை சந்திரன் சட்டத்திற்கு புறம்பாக எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். சந்திரன் நிலத்தில் கட்டிய கட்டிடம் எதற்காக கட்டினார் என்றால் தெரியாது, தொட்டி கட்டியுள்ளார், வீடு கட்ட அஸ்திவாரம் போட்டுள்ளார். கம்பெனி கட்டுவதாக சந்திரன் என்னிடம் சொன்னாரா என்றால் அவர் சொல்லவில்லை, கம்பெனி கட்டுவதாக பேசிக்கொண்டார்கள், ஆனால் எனக்கு அதுபற்றி தெரியாது. நான் அந்த ஊரில் குடியில்லை என்றாலும் வீரக்கல் காலணியில்தான் குடியிருக்கிறேன் என்றும், தேசிய ஊரக வேலை திட்டத்தில் தினமும வேலைக்கு சென்று அதன் மூலம் வருமானம் பெற்று வருகிறேன் என்றாலும்நான் சொல்வது போல அந்த நிலத்தில் 20 வருடங்களாக குடியிருக்கவில்லை என்றும், சாட்சி சொல்ல யாரும் வரவில்லை என்பதால் இந்திரஜித் என்னை காலணியில் இருந்து அழைத்து வந்து பொய் சாட்சி சொல்ல சொன்னார் என்றாலும் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

ஒம்/–DW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.